354—

ஆதி திராவிடர் பட்டா நிலத்தில் ஆக்கிரமிப்பு.

***3729 திருமதி கவிநிலவு தர்மராஜ் :**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கொடுமுடி ஒன்றியம் கொல்லங்கோவில் தாண்டாம் பாளையத்தில் 30 ஆதி திராவிடர்களுக்கு பட்டா வழங்கப்பட்ட நிலத்தில் தனியார் ஆக்கிரமிப்பு செய்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், ஆக்கிரமிப்பை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம். பெரியார் மாவட்டம், ஈரோடு வட்டம் கொடுமுடி ஒன்றியத்திற்குட்பட்ட கொல்லங்கோவில் கிராமம் தாண்டாம்பாளையத்தில் ஆதி திராவிடர்களுக்கு வீட்டு மனை வழங்க அக்கிராம க. ச. எண். 769/3-ல் 1.73 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு 16—11—1980 அன்று வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டது. வீட்டு மனை பெற்ற ஆதி திராவிடர்கள் நில உரிமையாளரின் மிரட்டலுக்கு அஞ்சி அதனை அனுபவம் செய்யாமல் விட்டு விட்டனர். அதனால் நில உரிமையாளரே அந்நிலத்தினை ஆக்கிரமித்து, சாகுபடி செய்து அனுபவித்து வருகிறார்.

(ஆ) இந்நில எடுப்பு 1978-ல் புதிதாக இயற்றப்பட்ட அரிசன நலத் திட்டங்களுக்காக தமிழ்நாடு நில எடுப்புச் சட்டத்தின் கீழ் (தமிழ்நாடு சட்டம் 31/78) மேற்கொள்ளப் பட்டது. இச் சட்டத்திற்கெதிராக இந்நில உரிமையாளரும் (W. P. No. 6203/80) இச்சட்டத்தால் பாதிக்கப் பட்ட பிற நில உரிமையாளர்களும் உயர் நீதி மன்றத்தில் தொடர்ந்த நீதிப் பேராணை மனுக்களை விசாரணை செய்த உயர்நீதி மன்றம் 9—9—1981 தேதியிட்ட தன் தீர்ப்பில், அரசியல் சட்டத்திற்கு முரணாக இச்சட்டம் உள்ளதால் செல்லாது என்று தீர்ப்பு வழங்கி விட்டது. இத்தீர்ப்புக் கெதிராக 1981-லேயே டெல்லி உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யப்பட்டு அவ்வழக்கு (C.A. 3312/81) இன்னமும் நிலுவையில் உள்ளது. இவ்வழக்கில் இறுதித் தீர்ப்பு வழங்கப் பட்ட பின்னரே இதுபற்றி ஆராய முடியும்.

1992 மார்ச் 25]

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இவ்வாறு விரிவான விடை அளிக்க விரும்புகிற மாண்புமிகு அமைச்சர்கள் அதை அவையில் வைத்து விடுவது நல்லது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திருமதி கவிநிலவு தர்மராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொடக்குறிச்சி தொகுதியிலே 55 சத வீதம் மக்கள் ஆதிதிராவிட மக்களாக இருக்கிறார்கள். அவர்களுடைய பட்டா விஷயத்தில் 17 பகுதிகளிலே ஆக்கிரமிப்புகள் நடந்து இருக்கின்றன. அரசினால் கையகப்படுத்தப்பட்ட நிலங்களை மீண்டும் அதற்குரிய நிலச் சொந்தக்காரர்கள் தடை செய்வதற்காக உயர் நீதிமன்றத்திலே வழக்கு தொடரக்கூடிய ஒரு இழி நிலையை மாற்றுவதற்கு சட்ட திருத்தம் ஏதேனும் செய்யக்கூடிய ஆலோசனை அரசிடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் காலத்தில் இது போன்ற ஒரு சட்டம் கொண்டு வந்தார்கள். அதையும் எதிர்த்து உயர்நீதிமன்றத்திற்கு சென்று அது தள்ளுபடி செய்யப்பட்டது. ஆகையினால் இது போன்ற கோரிக்கை சட்டத் துறை மூலம் ஆலோசிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 355, திரு. எஸ். டேனியல்ராஜ், மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர்.

355—

மீனவர்களைத் தேட ஹெலிகாப்டர்,

*4364 திரு. எஸ். டேனியல் ராஜ் :

மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கடலில் காணாமல் போன மீனவர்களை தேடுவதற்கு தூத்துக்குடியில் ஹெலிகாப்டர் நிறுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இதற்கான கருத்துரு ஏதுமில்லை.